**செ.வெ.எண்: 16** **நாள்:07.07.2020**

# அரியலூர் மாவட்டம்
# அரியலூர் அரசு மருத்துக்கல்லூரி, மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு கலைக்கல்லூரி அருகில் ரூ.347 கோடி மதிப்பில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் இன்று (07.07.2020) தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்கள்.

தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் **மரு.சி.விஜயபாஸ்கர்** அவர்கள், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இந்த நேரலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள், கலந்துகொண்டார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் அரியலூர் மாவட்டத்திற்கு மருத்துவக்கல்லூரி அமைக்க மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவாகள் பொதுமக்களின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில், புதிய மருததுவக்கல்லூரி மருத்துவமனை அரியலூரில் துவங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதன்படி, மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கான கட்டிடங்கள் கட்டும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி மூலம் இன்று அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் மேல் சிகிச்சைக்காக அருகிலுள்ள மாவட்டங்களான திருச்சி, தஞ்சாவூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு சென்று மருத்துவ பரிசோதனை மற்றும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அரியலூர் மாவட்டத்தில் புதியதாக அமைய உள்ள இந்த சிறப்பு வாய்ந்த மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை மூலம் அவசர சிகிச்சைகளுக்கோ, மேல் சிகிச்சைகளுக்கோ வெளி மாவட்டங்களுக்கு இனி வரும் காலங்களில் செல்லாமல் அரியலூர் மாவட்டத்திலே உயர்தர மருத்துவ சிகிச்சைகள் பெற்றுக்கொள்ளலாம்.

அரியலூர் மாவட்டத்தில் 26 ஏக்கர் பரப்பளவில் ரூ.347 கோடி மதிப்பில் அரசு மருத்துவக்கல்லூரி 700 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டிடம், அலுவலகக் கட்டிடங்கள், குடியிருப்பு கட்டிடங்கள் ஆகியவை கட்டும் பணிகளுக்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவக்கல்லூரியில் 150 மாணவர்கள் மருத்துவப்படிப்பு பயிலுவதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், அரசு மருத்துவக்கல்லூரி தலைவர் மரு.முத்துகிருஷ்ணன், செயற்பொறியாளர் சிவக்குமார், உதவி செயற்பொறியாளர் காந்தரூபன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**